செய்தி வெளியீடு எண்.740 நாள்.20.10.2009

**மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஈரோடு மாவட்ட நியாயவிலைக் கடைகளில் ஆய்வு**

**நியாயவிலைக் கடை விற்பனையாளர் மற்றும் எடையாளர் தற்காலிகப் பணிநீக்கம் வட்ட வழங்கல் அலுவலர் மீது துறை நடவடிக்கை**

**அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் தேவைக்கேற்ப 100 சதவீதம் அரிசி ஒதுக்கீடு செய்ய வேண்டும் – மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் ஆணை**

மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று (20.10.2009) காலை 8.00 மணிக்கு சிறப்பு ஆய்வு குழுவினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர்களுடன் ஈரோடு மாவட்டத்திலுள்ள நியாயவிலைக் கடைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஈரோடு மாவட்ட ஆய்விற்கு காலை 8.00 மணிக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் புறப்பட்டு கோவை (வடக்கில்) அன்னூருக்கு அருகிலுள்ள கரியம்பாளையம் கிராமத்தின் அருகே திடீரென்று வண்டியை நிறுத்தி அங்கிருந்த தீபிகா மளிகை அண்ட் மெஸ்க்கு சென்றார். அங்கே மளிகைப் பொருட்கள் வாங்க நின்றிருந்த பெண்ணை அழைத்து அவருக்கு நியாயவிலைக் கடையில் எத்தனை கிலோ அரிசி, எவ்வளவு விலையில் வழங்குகிறார்கள் என்பதை கேட்டறிந்தார்கள்.

காலை 9.30 மணிக்கு சத்தியமங்கலம் விருந்தினர் மாளிகைக்கு சென்று மாவட்ட ஆட்சியர் உட்பட அனைத்து மாவட்ட அலுவலர்களுடன் ஒன்று சேர்ந்து நியாயவிலைக் கடைகள் ஆய்விற்கு புறப்பட்டு, முதலில் சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் ரெங்கசமுத்திரம் நியாயவிலைக் கடையிலும், வரதபாளையம் நியாயவிலைக் கடையிலும், கொளத்தூர் மகளிர் நியாயவிலைக் கடையிலும் ஆய்வினை மேற்கொண்டார்கள். ரெங்கசமுத்திரம் நியாயவிலைக் கடையில் விற்பனை செய்ய வழங்கப்பட்ட ஆட்டா மாவு பாக்கெட்டுகள், மசாலா பொருள் பாக்கெட்டுகள், கோதுமை ஆகிய பொருட்களை இருப்பு வைத்துக் கொண்டு பொதுமக்களின் பார்வைக்கு வைக்காமலும், விற்பனை செய்யலாமலும் தேக்கி வைக்கப்பட்டுள்ளதை கண்டறிந்து அமைச்சர் அவர்கள் மிகவும் மனவேதனை அடைந்தார்கள். வரதபாளையம் நியாயவிலைக் கடையின் ஆய்வின்போது விற்பனையாளர் திரு. பி. புருஷோத்தம தாஸ் என்பவர் பொருட்களை எடை குறைவாக வழங்கியது மற்றும் போலி பட்டியல் தயாரித்தது ஆகிய முறைகேட்டில் ஈடுபட்டிருந்ததை கண்டறிந்து அவரை உடனடியாக தற்காலிகப் பணிநீக்கம் செய்ய ஆணையிட்டார்கள். கொளத்தூர் மகளிர் நியாயவிலைக் கடையில் மின் இணைப்பு இல்லாததை கண்டறிந்து உடனடியாக நியாயவிலைக் கடைக்கு மின் இணைப்பும், மின்னணு தராசும் பொருத்திட அலுவலர்களுக்கு ஆணையிட்டார்கள். கடைகளில் குழுமியிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்களிடம், அவர்களுக்கு அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் முறையாக வழங்கப்படுகிறதா என்பதையும் கேட்டறிந்தார்கள்.

சத்தியமங்கலம் நகரப் பகுதியிலும், வரதபாளையம் ஜே.ஜே. நகர் பகுதியிலும், பெரியகுளம் நாடார்காலனி பகுதியிலும் வீடு வீடாகச் சென்று அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் அவர்களுக்கு முறையாக வழங்கப்படுகிறதா என்பதை கேட்டறிந்தும், அவர்களுடைய குடும்ப அட்டைகளை பெற்று அனைத்து பொருட்களும் அவர்களுக்கு

வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் கண்டறிந்தார்கள். குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்து காத்திருப்பவர்களுக்கு உடனடியாக குடும்ப அட்டை வழங்க வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு ஆணையிட்டார்கள். குடும்ப அட்டை விண்ணப்பங்களை முறையாக 60 நாட்களுக்குள் இறுதி செய்யாத வட்ட வழங்கல் அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்கள்.

அடுத்து கோபிசெட்டிப்பாளையம் வட்டம், குள்ளம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, மற்றும் முதன்மை கூட்டுறவு வங்கியின் நியாயவிலைக் கடை, கவுந்தம்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் சூளைமேடு நியாயவிலைக் கடை மற்றும் எம்.கவுண்டம்பாளையம் நியாயவிலைக் கடைகளில் ஆய்வு மேற்கொண்டார்கள். குள்ளம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் நியாயவிலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களை இருப்பில் வைத்துக் கொண்டு பொது மக்களுக்கு வழங்காமல் தேக்கி வைத்திருந்ததை கண்டறிந்து விற்பனையாளரை கண்டித்தார். கவுந்தம்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் சூளைமேடு நியாயவிலைக் கடையை ஆய்வு செய்தபோது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பவானி கிடங்கிலிருந்து நியாயவிலைக் கடைக்கு ஏற்றி வரப்பட்ட அரிசி மூட்டைகளை இறக்கி மறு எடை போட்டு பார்த்ததில் எல்லா மூட்டைகளிலும் எடையளவு சரியாக இருந்ததை கண்டறிந்தார். எம்.கவுண்டம்பாளையம் நியாயவிலைக் கடை ஆய்வின் போது மின்னனு தராசு பயன்படுத்தப்படவில்லை என்பதாலும், போலிபட்டியல் தயாரித்ததற்காகவும் விற்பனையாளர் திரு. எம். சீனிவாசன் என்பவரை தற்காலிக பணி நீக்கம் செய்யவும், மேலும், இந்த நியாயவிலைக் கடையில் முறையற்ற வகையில் எடையாளராக பணிபுரிந்து வந்த திரு. முகமது செரிப் என்பவரை உடனடியாக கைது செய்து அவர் மீது வழக்கு தொடர குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை ஆய்வாளர் அவர்களுக்கு ஆணையிட்டார்கள்.

கோபிசெட்டிப்பாளையம் வட்ட வழங்கல் அலுவலகத்திலும் ஆய்வு மேற்கொண்டு மாதத்திற்கு ஒரு முறை கடைகளில் உள்ள அ– பதிவேட்டின் பதிவுகளை வட்ட வழங்கல் அலுவலுகத்தின் அ–பதிவேட்டுடன் ஒத்திசைவு செய்ய வேண்டும் என்றும் ஆணையிட்டார்கள். புதிய குடும்ப அட்டைகளை வழங்குவதில் உரிய காலக்கெடுவை கடைபிடிக்காததாலும், அ பதிவேடுகளை உரிய முறையில் மாதம் ஒரு முறை சரிபார்த்து ஒதுக்கீடு வழங்காததாலும், கோபிசெட்டிப்பாளையம் தனி வட்டாட்சியர் (உணவுப் பொருள் வழங்கல்) மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்கள்.

வீதி வீதியாக சென்று நியாயவிலைக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை தொடர்ந்து மாலை 4.00 மணிக்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் உணவுப் பொருள் வழங்கல் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களின் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆய்வு கூட்டத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் ஈரோடு மாவட்டத்தில் நியாயவிலைக் கடைகளில் தினசரி ஒரு பொருள் மட்டுமே வழங்கப்படுகிறது என்று புகார் கூறப்படுகிறது. மேலும், நியாயவிலைக் கடைகளில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொருட்கள் வழங்கப்படுவதால் பல நாட்கள் தங்கள் வேலையை விட்டுவிட்டு கடைக்கு வர வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்று பொது மக்கள் தெரிவித்ததன் பேரில், இனிமேல் அனைத்து நாட்களிலும் அனைத்துப் பொருட்களும் பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். நியாயவிலைக் கடைகளில் ஆய்வில் ஈடுபட்டபோது பெரும்பாலான கடைகளில்

தேவையான அளவில் அத்தியாவசியப் பொருட்களை இருப்பில் வைத்துக் கொண்டும், அப்பொருட்களின் மாதிரியை பொது மக்கள் பார்வைக்கு வைக்காமலும் இருந்தது கண்டறியப்பட்டது. எனவே, பொருட்களை முறையாக காட்சிபடுத்தியும், அவ்வப்போது கேட்கும் அளவில் பொது மக்களுக்கு வழங்கியும் பொருட்கள் தேக்கம் இல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ஆணையிட்டார்கள். மேலும், சர்க்கரை குடும்ப அட்டை உள்ளவர்களுக்கு அரிசியைத் தவிர இதர அனைத்து பொருட்களும் வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். ஒவ்வொரு கடைக்கும் உரிய "அ" பதிவேடுகளை மாதம் ஒருமுறை வட்ட வழங்கல் அலுவலர்கள் அ பதிவேடுகளில் முழுமையாக திருத்தங்கள் மேற்கொண்டு "அ" பதிவேடுகளில் கையொப்பமிட்டும், மாதாமாதம் இது போன்று சரிபார்த்த பின்னரே நியாயவிலைக் கடைகளுக்கு பொருள் ஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு செய்ய தவறும் வட்ட வழங்கல் அலுவலர் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். அச்சடித்த குடும்ப அட்டையை மனுதாரருக்கு வழங்கும்போது வேறு இடத்தில் குடும்ப அட்டைக்காக விண்ணப்பிக்கக் கூடாது என்பதற்காக நீக்கல் சான்றின் அசல் சான்றைப் (Original) பெற்று விண்ணப்பித்தினை பரிசீலிக்க வேண்டும். அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் அட்டைகளின் உரிய ஒதுக்கீட்டின் அடிப்படையில் அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் 100 % அரிசி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் இதனை அனைத்து குடும்ப அட்டைதரார்களுக்கு முறையாக விநியோகம் செய்ய வேண்டும் என்றும் ஆணையிட்டார்கள். 100 சதவீதம் அரிசி ஒதுக்கீடு வழங்கிய பின் பச்சை நிற அட்டை வைத்துள்ளவர்களுக்கு 12 கிலோ முதல் 20 கிலோ வரையிலும் அந்தியோதயா அன்ன யோஜனா (AAY) பச்சை நிற அட்டைகளுக்கு 35 கிலோ அரிசியும் முழு அளவில் அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதில் தவறு செய்யும் நியாயவிலைக் கடை பணியாளர்கள் மீது கடும் ஒழுங்கு மற்றும் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்க உத்தரவிட்டார்கள்.

சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து பொருட்களும் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதை மாவட்ட வழங்கல் அலுவலரும், மண்டல இணைப்பதிவாளர்களும் முனைப்புடன் கண்காணிக்க வேண்டும். தரமான பொருட்கள் மட்டுமே கடைகளுக்கு கிடங்குகளிலிருந்து அனுப்பப்பட வேண்டும். தரமற்ற பொருட்களை கடைகளுக்கு அனுப்பும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஆணையினை மீறும் நியாயவிலைக் கடை ஊழியர்கள் மீதும், சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத் தனி அலுவலர் ஆகியோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்கள். மேலும், கிடங்குகளிலிருந்து அனுப்பப்படும் பொருட்கள் தான் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை மண்டல மேலாளர்கள் நியாயவிலைக் கடைகளுக்கு சென்று ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். அதன் பிறகு மாவட்ட வழங்கல் அலுவலர், மண்டல இணைப்பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஆகியோர்களின் செயல்பாட்டினை தனித்தனியாக ஆய்வு செய்து எவ்வித குறைபாடுகளுமின்றி செயல்பட அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், திரு. க. சண்முகம், இ.ஆ.ப., முதன்மை செயலர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. கா. ராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. ஆர். சுடலைக்கண்ணன், இ.ஆ.ப., ஈரோடு மாவட்ட ஆட்சியர், திரு. குமார் முருகேசன், ஈரோடு மாநகர மேயர் ஆகியோர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**